DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 678/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : பொன்னம்மாள் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்றால் பணியில் ஓய்வு பெற்றுள்ளேன். இந்த வழக்கு சாட்சிகாக நீதிமன்றத்தில் இருந்து சமம் வந்தது என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட பொருளை நீங்கள் தான் ஆய்வு செய்தீர்கள் என்றால் ஆமாம். கலர் 300 கிராம் டீத்துாள் பிரவுன் கலர் காகித கவரில் பேக் செய்து அனுப்பப்பட்டிருந்தால் அது விதிகளின்படி தவறு என்றால்வெறும் சிங்கிள் பேக் என்றால் தவறு. சிங்கிள் பேக்கில் ஈரப்பதமான பசைகளை பூசி அனுப்பியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம். பிரவுன் கலர் கவரில் ஈரப்பதம் என்பது அந்த கவருக்குள் இருக்கும் பொருள் மீது பட்டு கலர் மாறப்படும் என்றால் இல்லை. வெறும் பிரவுன் கலர் கவர் என்று தான் அவர் சொல்லியுள்ளார் என்றாலும் அது என்ன வகையான பிரவுன் கலர் அவர் என்று உங்களுக்கு தெரியாது என்றாலும் ஆமாம். நான் பாலித்தீன் கவரை தான் பெற்றேன். நெகிழி பை என்றால் பாலிதின் பை ஆகும்.

2. ட தூள் உங்கள் கைக்கு வந்த தேதியிலிருந்து எத்தனை நாள் கழித்து ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது என்றால் கிட்டத்தட்ட 11 மாதம். 03.06.2019– 12.06.2019 ம் தேதி வரை ஆய்விற்கு உட்படுத்தினோம். ஒரு வருட கால தாமதத்தை குறிப்பிட்டு அனுமதி நீங்கள் பெறவில்லை என்றால் அனுப்பியுள்ளேன். உங்களுக்கு கிடைக்கப்பெற்ற மாதிரி பிரவுன் கலர் கவர் இல்லாமல் கூடுதலாக நெகிழிப்பையும் இணைக்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் தவறை மட்டும் சாம்பிளுக்கு அனுப்பி இருந்தால் அது உங்களுக்கு அனுப்பப்பட்ட மாதிரி இல்லை என்றால் ஆமாம்.
3. உணவு பாதுகாப்பு சட்டம் 2011 ன் விதியின் படி எந்த இடத்திலும் நெகிழிப்பை பாலித்தீன் கவர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சூட்டபிள் கண்டெய்னர் என்பதை நெகிழிப்பை என சொல்லப்படவில்லை என்றால் உள்ளது. பாட்டில், ஜார் மீது பேக்கிங் செய்து மேல் பேப்பர் போட்டு அனுப்ப வேண்டும் என்றாலும் போன் கவரில் வந்தாலும் அவ்வாறு வராத சேம்பில்களை திருப்பி அனுப்ப வேண்டும் என்றாலும் வெறும் பிரவுன் கவரில் வந்தால் அனுப்ப வேண்டும், ஆனால் எங்களுககு வந்த பொருள் டைட்டாக பேக்கிங் செய்து சூட்டபிள் கவரில் வந்ததால் ஆய்விற்கு எடுத்து கொண்டோம்.
4. உங்களால் எந்த இடத்தில் நெகிழிப்பை என்று சொல்ல முடியாது என்று வழக்கிற்காக பொய்யாகசொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. 14 நாட்களுக்குள் ஆய்விற்கு எடுத்திருக்க வாய்ப்புள்ள நிலையில் வேண்டுமென்றே 14 நாட்கள் காலதாமதமாக ஆயவிற்கு எடுத்துள்ளிர்கள் என்றால் சரியல்ல. காலதாமதம் குறித்து ஆய்விற்காக ஆள்பற்றவில்லை என கூறியுள்ள காரணம் சட்டத்திற்குட்பட்டு காரணம் சொல்லவில்லை என்றால் சரியல்ல.
5. உங்களுக்கு கிடைக்கப்பட்ட சேம்பிள்களை முறையான விதிகளின் படி அனுப்பப்படாமல் உள்ள நிலையில் அதை திருப்பி அனுப்பாமல் உங்கள் கை வசம் வைத்திருந்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல. நீங்கள் காலதாமதாக ஆய்வு செய்ததாலும் ஆய்வு செய்யாததாலும் கலர் கூடுதலாக உள்ளதாக உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.